# பெறுகை நடவடிக்கை திட்டம்

2021

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்

## தொலைநோக்கு

அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அதனையொத்த ஏனைய நிறுவனங்கள் என்பவற்றில் சேவையாற்றும் அலுவலர்களால் இழைக்கப்பட்ட நிர்வாக அநீதிகளை ஒழிக்கும் பொருட்டு விசேடமாக நடுநிலமை, வெளிப்படைத் தன்மை என்பன ஒருங்கமைந்தவாறான பாதுகாப்பானதும், நீதியானதும் மற்றும் நேர்மையானதும் ஆன தீர்மானங்களை வழங்குவதனூடாக சிறந்த மக்கள் சேவையை உறுதிப்படுத்துவதற்கு சகல முயற்சிகளையும் எடுப்பதே எமது தொலைநோக்கமாகும்.

## பணி

அரசாங்க நிறுவனங்கள். உள்ளூராட்சி மன்றங்கள், நியதிச் சட்ட சபைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் பகுதியளவிலான அரசாங்க நிறுவனங்கள் என்பவற்றில் பணிபுரியும் அலுவலர்களால் புரியப்படும் மனித உரிமை மீறல்களுடன் தொடர்புபட்ட முறைப்பாடுகளை நடுநிலமையாக புலனாய்வு செய்து அதன்பின்னர் அம்மீறல்களுக்கு பரிகாரமாக ஏற்புடையதான கட்டளைகள், தீர்மானங்கள், ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றை வழங்குதல் ஆகும். நிர்வாக அநீதிகள் மற்றும் இலங்கை குடியரசின் அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்ட அடிப்படை உரிமைகள் மீறல்கள் என்பன உள்ளடங்கலாக வேறுவகையான ஏனைய அநீதிகளும் மேலே கூறப்பட்ட மீறல்களுள் உள்ளடங்குவன  ஆகும்.

## பிரதான பணிகள்

அரசாங்க திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், மாகாண சபைகள் அல்லது அத்தகைய ஏனைய நிறுவனங்கள் என்பவற்றில் பணிபுரியும் அலுவலர்களால் புரியப்பட்ட அடிப்படை உரிமை மீறல்கள் அல்லது அதனையொத்த வகையான அநீதிகளை ஒழிக்கும் பொருட்டு பொதுமக்களால் ஒம்புட்சுமானுக்கு முன்வைத்த முறைப்பாடுகள் தொடர்பில் புலனாய்வை நடாத்துதலும், தவறாக வழங்கப்பட்ட நிர்வாக தீர்மானங்கள் தொடர்பில் கோரிக்கை விடுத்தலும் ஆலோசனை வழங்குதலும் மற்றும்/அல்லது பரிந்துரை வழங்குதலும் ஆகும்.

பாராளுமன்ற உறுப்பினரொருவரால் பாராளுமன்ற பொதுமனுக்கள் குழுவின் ஊடாக ஏதாவது உரிமை மீறலொன்றிற்குள் உள்ளடங்குமாயின் அம்முறைப்பாடுகள் தொடர்பில் இவ்வலுவலகம் புலனாய்வு செய்து தீர்வுகளை வழங்குகிறது.

எமது நாட்டின் நீதிகள் மற்றும் அதற்கு அமைய உருவாக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு அமைய, இலங்கை நிர்வாகப்பொறிமுறையை சரியான முறையில் கொண்டு சென்று, அடிப்படை உரிமை மீறல்களால் பாதிப்படைந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குவதே இந்நிறுவனத்தின் பிரதான நோக்கமாகும்.

## பயனாளிகள்

அரசாங்க திணைக்களங்கள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள், மாகாண சபைகள் அதேபோன்ற ஏனைய நிறுவனங்கள் என்பவற்றில் பணிபுரியும் அலுவலர்களினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தினால் பாதிப்படைந்த பொதுமக்களே பயனாளிகள் ஆவார்கள். இறுதியாக, எமது நாட்டின் சகல நிர்வாக முறைமையை தரமுயர்த்துவதே எமது பணியாகும்.

**2021 ஆம் ஆண்டின் பெறுகை நடவடிக்கை திட்டத்திற்கான நிதி வளங்கள்**

| வகை | ரூபா. |
|---|---|
| மீண்டெழும் செலவீனம் | 1,850,000.00 |
| மூலதன செலவீனம் | 1,262,000.00 |
| மொத்த செலவீனம் | 3,112,000.00 |

**<u>பண்டங்கள், சேவைகள் மற்றும் கட்டுமான வேலைகள் என்பவற்றின் 2021 ஆம் ஆண்டுக்கான பெறுகை நடவடிக்கை</u>**

**(1) <u>பண்டங்கள்</u>**

| | விவரணம் | பெறுகை முறை | எதிர்பார்க்கப்பட்ட நேரம் காலம் | எதிர்பார்க்கப்பட்ட விலை- ரூபாவில் |
|---|---|---|---|---|
| | (அ) <u>தொழில் நுட்ப உபகரணங்கள்</u> | | | |
| (i) | புகைப்பட பிரதியெடுக்கும் இயந்திரமொன்று கொள்வனவு (Duplex) | வாங்கும் முறை | சனவரி-டிசெம்பர் 2021 | 250,000.00 |
| (ii) | Laser வகை 03 அச்சு இயந்திரங்கள் கொள்வனவு | வாங்கும் முறை | சனவரி-டிசெம்பர் 2021 | 100,000.00 |
| (iii) | கணினியொன்றின் கொள்வனவு | வாங்கும் முறை | சனவரி-டிசெம்பர் 2021 | 100,000.00 |
| (iv) | பல் ஊடக படகாட்சி இயந்திரம் ( Multimedia Projector) | வாங்கும் முறை | சனவரி-டிசெம்பர் 2021 | 80,000.00 |
| | | வாங்கும் முறை | சனவரி-டிசெம்பர் 2021 | 50,000.00 |
| | (ஆ) <u>தளபாடங்கள்</u> | | | |
| (i) | சாப்பாட்டு மேசையொன்றின் (நடுதர அளவு) கொள்வனவு | வாங்கும் முறை | சனவரி-டிசெம்பர் 2021 | 30,000.00 |
| (ii) | 05 திறந்த பொருள் வைப்பு சட்டங்கள் (rack) | வாங்கும் முறை | சனவரி-டிசெம்பர் 2021 | 120,000.00 |
| (iii) | ஆலோசனை பெட்டியொன்று | வாங்கும் முறை | சனவரி-டிசெம்பர் 2021 | 12,000.00 |
| (iv) | நீர் விநியோகம் | வாங்கும் முறை | சனவரி-டிசெம்பர் 2021 | 20,000.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | (இ) <u>காகிதாதிகள்</u> | அரசாங்க நிறுவனங்களூடாக (STC நிறுவனம்) | மாதாந்தம் | 700,000.00 |
| | (ஈ) <u>வாகனங்கள்</u> | | | |
| (i) | வாடகைக்கு வானொன்றைப் பெறுதல் | பெறுகை குழுக்களை அமைத்து கேள்விகளை கோரல். (போட்டியடிப்படையில் விலைகூறல்) | சனவரி-டிசெம்பர் 2021 | 1,000,000.00 |
| | (உ) <u>சேவைகள்</u> | | | |
| (i) | கணினிகள்/ அச்சு இயந்திரம் சேவை ஒப்பந்தம் | முகவர்களூடாக | சனவரி-டிசெம்பர் 2021 | 100,000.00 |
| (ii) | புகைப்பட பிரதி இயந்திர சேவை ஒப்பந்தங்கள் | முகவர்களூடாக | சனவரி-டிசெம்பர் 2021 | 27,000.00 |
| (iii) | தொலைநகல் (பக்ஸ்) இயந்திர சேவை ஒப்பந்தம் | முகவர்களூடாக | சனவரி-டிசெம்பர் 2021 | 8,000.00 |
| (iv) | வருடாந்தம் இக்கட்டடத்திலுள்ள காற்று சீரமைப்பாக்கி (Air Conditioner), பாரம் தூக்கி (Elevator), மின்பிறப்பாக்கி (Generator), தீயணைப்பு கருவி என்பவற்றை பராமரித்தல். | ஒருவருடம் முடிவடைந்த பின்னர் முகவர்களூடாக | சனவரி-டிசெம்பர் 2021 | - |
| (iv) | விரல் அடையாள இயந்திர சேவை ஒப்பந்தம் | முகவர்களூடாக | சனவரி-டிசெம்பர் 2020 | 15,000.00 |

## (2) பணிகள்

| | விவரணம் | பெறுகை முறை | எதிர்பார்க்கப்பட்ட நேரம் காலம் | எதிர்பார்க்கப்பட்ட விலை- ரூபாவில் |
|---|---|---|---|---|
| (i) | அலுவலகத்தில் கணினி வலையமைப்பு | பெறுகை குழுக்களை அமைத்து கேள்விகளை கோரல். (போட்டியடிப்படையில் விலைகூறல்) | சனவரி-டிசெம்பர் 2021 | மதிப்பீடு செய்யப்படவில்லை |
| (ii) | கோவை முகாமைத்துவத்துக்காக தரவு தளத்தை அமைத்தல் | பெறுகை குழுக்களை அமைத்து கேள்விகளை கோரல். (போட்டியடிப்படையில் விலைகூறல்) | சனவரி-டிசெம்பர் 2021 | 500,000.00 |
| (iii) | அலுவலகத்தின் உள்ளக அமைப்பு- பொது மக்களுக்காக கவர்ச்சியான அலுவலக சூழலை உருவாக்கல் | வாங்கும் முறை | சனவரி-மே 2021 | 50,000.00 |

இவ்வலுவலகதம் தனியாருக்கு சொந்தமான கட்டடமொன்றில் வாடகை அடிப்படையில் தற்போது இயங்குகின்றது.இது சுயேச்சையான நிறுவனமாக இருப்பதால், பத்தரமுல்லவில் அமைக்கப்பட்ட கட்டடமொன்றில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய அக்கட்டடத்திற்கு இந்நிறுவனம் தனது பணியை ஆரம்பித்த பின்னர் எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

ஓய்வூபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி கே.டி.சித்ரசிறி,

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர்

(ஒம்புட்சுமான்)